முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

21.08.2019, புதன்கிழமை

1. **பிரணவ கீர்த்தியே ஆறுமுக அரங்கா**
   **பிரளயமிலா காக்க வேண்டியே**
   **சரவணச் சுடராய் வந்த தேசிகா**
   **சற்குருவே உன் பெருமை கூறி**
2. கூறியே நித்ய பிரசன்ன ஆசியை
   குறையிலா **விகாரி யாளி திங்கள்**
   **தெரியவே சதுர்திகதி புந்தி வாரம்**
   **(விகாரி வருடம் ஆவணி மாதம் 4ம் தேதி, 21.08.2019, புதன்கிழமை)**
   **தேசிகனுக்கு திருமழிசை ஆழ்வார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
   உயர்வாக ஞானவழிகாட்டி அருளும்
   ஞானதேசிகன் உண்மை மார்க்கத்தை
   நம்பகம் கொண்டு உலகமக்கள் வர
4. வருகவே சன்மார்க்கம் வளர்வதுடன்
   வையகம் எங்கும் நன்னடத்தை
   தருமசிந்தை மக்களிடை பரவி
   தரணியே பாதுகாப்பு பலம் பெறும்
5. பலமான முருகப்பெருமான் வழிபாட்டை
   பாமரரும் செய்து உயர வேண்டி
   வலம் வரும் அரங்கன் கொள்கைகள்
   வழிபாடாக பின்பற்றப்பட உலகில்
6. உலகில் முருகப்பெருமான் அருளும்
   உயர்வானச் சூழலும் உருவாகும்
   வளமான நீர்நிலைகளுடன்
   வறுமை என்பதே இல்லா வண்ணம்
7. வண்ணமுடன் உலகம் சிறந்து
   வக்ர கொடூர செயல்களில்லா
   எண்ணம் தூய்மைபட மக்களுள்
   எல்லாம் சமம் எனும் தெளிவும்
8. தெளிவும் திடமும் கூடி இனிதே
   தேசிகனார் நெறி வழிநடத்தும்
   அழிவு என்பது புவி தன்னில்
   அணுகாத வண்ணம் சிறந்து
9. சிறந்துமே மக்களுக்கு மனபலமும்
   சிறப்பறிவும் கூடி அரங்கன் தயவில்
   பரந்த உலகில் எல்லா மக்களும்
   பக்குவமுடன் அழியாமையும் அடைவர்
10. அடையவே இனியும் உலக மக்கள்
    அலட்சியம் காட்டா அணுகியே
    தடையற பிரணவக் குடிலின்
    தவராசனை அடைந்து தீட்சை ஏற்று

11. ஏற்றுமே குருவே சரணம் சரணமென
இனிதே சரணடைவு கொண்டுமே
ஆற்றல்பட செபதபம் காணவே
அறம் வளர்க்கவே கலியுகம் மாற்றம் பெறும் நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் திருமழிசை ஆழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

ஓங்கார சக்தியின் பெருமைமிக்க மகா ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே இவ்வுலகினில் பிரளயமாகிய பேரழிவு நேராதவாறு மக்களை பிரளயத்திலிருந்து காத்து மீட்கவே சரவணஜோதிச் சுடராய் இவ்வுலகில் அவதாரம் புரிந்திட்ட ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகோரை வழிநடத்தி கடைத்தேற்றிட சற்குருவாய் அவதரித்திட்ட சற்குருநாதனே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் ஆவணி மாதம் 4ம் நாள் **21.08.2019,** புதன்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே திருமழிசை ஆழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருமழிசை ஆழ்வார்.

மக்கள் கடைத்தேறிட உயர்வான ஞானவழி காட்டி அருள் செய்து காக்கின்ற ஆறுமுக அரங்கரின் உண்மை ஞானமார்க்கத்தினை உலக மக்களெல்லாம் நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்து வர, உலகினில் சன்மார்க்க நெறி வளர்வதுடன் உலகமெங்கும் மக்களிடையே நன்னடத்தை பெருகி தருமசிந்தையும் பெருகி இவ்வுலகமே தருமபலம் பெருகி ஞானிகளின் அருள் பாதுகாப்பை பெற்றிடுமப்பா, பலமான உலகமாக இவ்வுலகம் மாறிடுமப்பா.

சர்வ வல்லமைகளை தந்தருளும் ஆற்றல் மிக்க, முருகப்பெருமானின் வழிபாட்டினை கல்வியறிவு இல்லாத பாமர மக்களும் செய்து அவர்களும் தங்களது உயர்நிலையை அடைய வேண்டி அரங்கன் அருளிய உயர்ஞான கொள்கைகள் உலகமெங்கும் விரைந்து பரவி வருகுதப்பா. உலக மக்களெல்லாம் வல்லமைமிக்க அரங்கரின் உயர் ஞானகொள்கைகளை ஏற்று முருகப்பெருமான் வழிபாட்டினை தவறாது செய்து வர வேண்டுமப்பா.

இவ்விதமே உலக மக்களெல்லாம் முருகப்பெருமானை வழிபடுவதுடன் அரங்கரின் கொள்கைப்படி நடந்து வந்திட உலகினில் முருகப்பெருமானின் அருள் பெருகி உலகமெங்கும் உயர்ஞான சூழல் உருவாகிடும். ஞானிகள் அருளால் முருகப்பெருமான் கருணையால் உலகமெங்கும் இயற்கையும் மகிழ்ந்து உலகினை வளப்படுத்தும். உலகமெலாம் வளமான சூழ்நிலைகள் உருவாகிடும், நீர்நில வளம் பெருகும், நீர்நிலைகள் நிரம்பிடும். உலகினில் வறுமை என்பதே இல்லாதவாறு உலகம் மேன்மை அடைந்து வளமான உலகமாக ஞானமுடன் செழித்து ஓங்கும்.

மக்களிடையே உண்டான வக்ரமான எண்ணங்களும் கொடூர எண்ணங்களும் மாறிடும், உலகில் வக்ர கொடூர செயல்கள் மறையும், மக்களது எண்ணம் தூய்மை அடைந்து மக்களிடையே உள்ள பேதாபேதம் மறைந்து எல்லோரும் சமம் எனும் ஒற்றுமை மனப்பான்மை வளர்ந்து ஒன்றுபட்ட உலகமாக மாறும். மக்களிடையே மனத்தெளிவும் மனோதிடமும் பெருகி மக்களை ஞானதேசிகன் அரங்கனின் தூயநெறி அற்புதமாய் வழிநடத்தி காக்கும். அரங்கநெறியில் மக்கள் நடந்து வருவதால் உலகில் மக்களுக்கு ஆற்றல் பெருகி, அழிவு என்பதே இல்லாதவாறு உலகம் சிறப்படையும். மக்களின் மனோபலம் பெருகி சிறப்பறிவு உண்டாகும். அரங்கன் அருளால் இந்த உலகினில் எல்லா மக்களும் பரிபக்குவம் பெற்று அழிவிலாமை எனும் மரணமற்ற நிலையை அடையும் வாய்ப்பையும் பெறுவார்கள்.

ஆதலினாலே உலக மக்களே இனியும் அலட்சியமாக இல்லாமல் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அணுகிடுவார்கள். ஓங்காரக்குடிலிற்கு வருகை புரிந்து பயபக்தியுடன் ஞானத்தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் திருவடி பணிந்து தீட்சை உபதேசம் பெற்று அரங்கமகானை குலகுருவாக ஏற்றுக் கொண்டு அரங்கன் திருவடிகளே குருவே சரணம், சரணம், சரணம் என்றே முழுச்சரணாகதியினை அடைந்து ஆற்றல் பெற்று ஜெபதபங்களை வல்லமையுடன் செய்து தானதருமங்களை தளராமல் செய்து வாருங்கள். அரங்கன் அருளால் இந்த கலியுகம் உறுதியாக மாற்றம் அடைந்து வெகுவிரைவில் ஞானயுகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் திருமழிசை ஆழ்வார்.

–சுபம்–